# “அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் மேலாண்மை துறை சார்பாக “மேலாண்மையில் புதுமையான நடைமுறைகள்” என்ற தலைப்பில “தேசிய அளவிளான கருத்தரங்கம“

எருமப்பட்டி, அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் 18.04.2015 சனிக்கிழமையன்று மேலாண்மை துறை சார்பாக ‘‘மேலாண்மையில் புதுமையான நடைமுறைகள்’’ என்ற தலைப்பில் தேசிய அளவிளான கருத்தரங்கம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவை கல்லூரியின் தாளாளர் **திரு. M. மணி** அவர்கள தலைமையேற்று துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக பெங்களூர் மணிப்பால் குழுவின் தலைமை மனிதவள மேலாளர் **திருமதி. B. ரன்ஜு** அவர்கள கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் கல்லூரி முதல்வா **முனைவர் P.பழனிச்சாமி** அவர்கள வாழ்த்துரையாற்றினார். கல்லூரியின் துணை முதல்வர் **திரு. A.நடராஜன்** அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலாண்மை துறை தலைவர் **முனைவர் K. சௌந்தரராஜன்** அவர்கள வரவேற்புரையாற்றினார்.

கல்லூரியின் தாளாளர் திரு. M. மணி அவர்கள் பேசியதாவது :

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ‘‘மேலாண்மையில் புதுமையான நடைமுறைகள்’’ என்ற தேசிய அளவிளான கருத்தரங்கம் இன்றைய காலகட்டத்திற்குஏற்ற தலைப்பாகும். ‘‘மேலாண்மையில் என்பது ஆழ்கடல் போல் மிக ஆழமானது உங்கள் அறிவு சார்ந்த தேடல் அதிகமாகி கொண்டே இருக்க வேண்டும். 2000வருடத்திற்கு முன் தோன்றிய திருக்குறள் தற்போதும், எப்போதும் எல்லா கால சூழ்நிலைக்கும், இடத்திற்கும் ஏற்ப சரியான விளக்கமளிக்கும். அதில் குற்றம் கடிதல், காலமறிதல், இடனறிதல், தெரிந்துதெளிதல், தெரிந்துவினையாடல், அவைறிதல், கண்ணேட்டம், ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை என்பனவாகும்.

அதில் தெரிந்துவினையாடல் எனும் அதிகாரத்தில் **“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்நது அதனை அவன்கண் விடல்”** எனும் திருக்குறள் மனிதவளம் முழுமைக்கும் மிகமிக பொருத்தமானதாகும். எந்த ஒரு பணியை திறம்பட யார் செய்ய வேண்டும் எவ்வாறு செய்து முடிக்க வேண்டும் என்பது மட்டுமின்றி எந்த ஒரு பணியை செய்தாலும் அதில் ஈடுபாட்டோடும் ஆர்வத்தோடும் முழுமையாக செய்ய வேண்டும் அப்போது தான் அந்த செயல் வெற்றி பெறும. அதுமட்டுமின்றி தகவல் தொடர்புததிறன் ஆங்கிலமொழி அத்தியவசியமாகிவிட்டது. எந்த ஒரு வேலைவாய்ப்புக்கு உடல் மொழி, எழுத்துப்பயிற்சி, வாய்மொழிபயிற்சி, கவனித்தல் பயிற்சி எனபலவகைஉண்டு. அன்றாடம் இந்த பயிற்சிகளை மேற்கொண்டாலே நீங்கள் புலமைபெற்றுவிட முடியும். இங்கு பங்கு பெற்றிருப்போர் அனைவரும் “மேலாண்மையில் புதுமையான நடைமுறைகள்” என்ற தலைப்பை பல்வேறு கோணங்களில் வெளியிட தயாராக உள்ளீர்கள். அதை ஆராய்ந்து எவ்வாறு என்பதை நீங்கள் திறம்பட வெளியிட வேண்டும் என்றும் அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் உரையாற்றினார்.

<u>சிறப்பு விருந்தினா திருமதி. B. ரன்ஜு அவர்கள் பேசியதாவது:</u>

. இன்றைய காலகட்டத்தில் நீங்கள் மூன்று முக்கியமான அறிவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது என்னவென்றால், அணுகுமுறை, கருத்து பரிமாற்ற திறமை, குழுவேலை இந்த அறிவுகளை நீங்கள் திறம்பட கற்க வேண்டும் அப்போதுதான் உங்கள் வாழ்வில் எத்தனை தடைகள் வந்தாலும் அதை முறியடித்து வெற்றி பெற முடியும். இன்றைய சூழலுக்கு ஏற்ப நீங்கள் உங்கள் துறையில் புதுமைகளை படைக்க வேண்டும்.திறமைமிக்க மேலாளர்களாக சாதனை படைக்க வேண்டும் என்றும், கனடாவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தும் மாராத்தான் ஓட்டத்தில் மாபெரும் சாதனையும் அதன் மூலம் 23 மில்லியன் டாலர்களை திரட்டி தன்னைபோன்று புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்போருக்கு உதவி புரிந்த டெரிஃபாக்ஸ் என்ற சாதனையாளரின் வாழ்க்கை வரலாற்றை அறிய வேண்டும்.

உங்களின் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள பல்வேறு அறிவு சார்ந்த கூட்டங்களும் கருத்தரங்கமும் நடைபெறுகின்றது. ‘‘மேலாண்மையில் புதுமையான நடைமுறைகள்’’ என்ற தேசிய அளவிளான இந்த கருத்தரங்கம் இதில் புதுமை என கூறுவது என்னவென்றால் உற்பத்திபொருள், மக்கள், செயல்முறைகள், தொழில் நுட்பங்கள என நிறைய உள்ளன. உங்கள் துறைகளிலே புதுமைகளை நீங்கள் படைக்க வேண்டும். நீங்கள் உருவாக்கும் புதுமைகளை நீங்கள் வெளிப்படுத்த எத்தனையோவாய்ப்புகள் இங்கே கொட்டிக் கிடக்கின்றது. உங்கள் துறை சார்ந்த புதுமையான செயலாக்கங்களையும் கற்க வேண்டும்.

அதே போல நிறுவனத்தில் நீங்களும் ஒரு அங்கமானவர். உங்கள் பணியில அணுகுமுறை நேர்மறையாக இருக்கவேண்டும் அதுமட்டுமின்றி விசுவாசம், அர்ப்பணிப்பு நேர்மை, உண்மை இவையாவும் உங்களை நல்வழிபடுத்தும் மேலும் நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.அதற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன் என்று உரையாற்றினார்.

இந்த கருத்தரங்கில் இக்கல்லூரி மாணவர்கள, பேராசிரியர்கள் மற்றும் 47க்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரிகளிலிருந்து மாணவர்கள், மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு 120க்கும் மேற்பட்ட தங்கள் கருத்துக்களை அறிக்கைகளாக வழங்கினர்.

விழாவில் இறுதியாக மேலாண்மை துறையின் இறுதியாண்டு மாணவி செல்வி . A.கௌசல்யாதேவி அவர்கள் நன்றியுரை கூறினார்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை மேலாண்மை துறை பேராசிரியர்களும் மற்றும் மாணவர்களும் செய்திருந்தனர்.